FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | பரதநாட்டியம் - I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ ***1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

01. நாட்டியத்தில் சிகரம் போன்ற உருப்படி.
1) அலாரிப்பு 2) வர்ணம் 3) கீர்த்தனை 4) பதம் 5) சப்தம்

02. கற்றறிந்தோர் அவையில் ஆடப்படும் கூத்து.
1) வேத்தியல் 2) பொதுவியல் 3) குரவை
4) துணங்கை 5) வெறியாடல்

03. உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி இருக்கும் இடம்.
1) பேரம்பலம் 2) நிருத்தசபை 3) ராஜசபை
4) சிற்சபை 5) மூலஸ்தானம்

04. பாலை நில மக்களால் ஆடப்படும் கூத்து.
1) குன்றக் குரவை 2) ஆய்ச்சியர் கூத்து 3) வேட்டுவவரி
4) சாக்கையர் கூத்து 5) வரிக்கோலம்

05. சேரியைக் காட்ட பயன்படுத்தப்படும் ஒலி உத்தி
1) பேரூந்து ஓசை 2) பறவைகள் கீச்சிடும் ஒலி 3) நாய்குரைக்கும் ஓசை
4) முச்சக்கரவண்டி ஒலி 5) ஆந்தை அலறுதல் ஒலி

06. “நாதப்பறையினர் அன்னே என்னும்” என கூறியவர்.
1) மணிவாசகர் 2) ஞானசம்பந்தர் 3) அப்பர்
4) சுந்தரர் 5) சேக்கிழரார்

07. ; ; ; ; ; , தத், தீங்கிணதொம் தத்,தீங் கிணதொம் தத், தீங்கிணதொம் இதன் ஜாதி.
1) கண்டம் 2) சதுஸ்ரம் 3) திஸ்ரம்
4) சங்கீர்னம் 5) மிஸ்ரம்

08. சரணஸ்வரத்தைக் குறிப்பது
1) பல்லவி 2) அனுபல்லவி 3) எத்துக்கடை ஸ்வரசாகித்தியம்
4) சரணம் 5) உத்தராங்கம்

09. ஆனந்தத் தாண்டவத்தில் கௌரித் தாண்டவம் உணர்த்துவது.
1) படைத்தல் 2) அருளல் 3) மறைத்தல்
4) அழித்தல் 5) காத்தல்

10. தென்பாங்கில் காணப்படும் இசை
1) மெல்லோசை 2) புகழோசை 3) விருத்தம்
4) வசனம் 5) வல்லோசை

11. திரிகூட ராசப்பக் கவிராயர் எழுதிய நூல்.
1) குற்றாலக்குறவஞ்சி 2) மகாபாரதம் 3) சிலப்பதிகாரம்
4) நந்தன் சரித்திரம் 5) திருமயிலைக் குறவஞ்சி

12. பிறரைச் சிரிக்கச் செய்யும் ஹாஸ்யம் உணர்த்துவது.
1) ஆத்மாஸ்த 2) பராஸ்தம் 3) உபஹஸிதம்
4) அபஹஸிதம் 5) ஸ்மிதம்

13. விபாவங்களால் ஏற்படும் உள்ளத்து உணர்வுகளை உடலால் வெளிப்படுத்துவது.
1) விபாவம் 2) வியபிசாரி பாவம் 3) அனுபவாம்
4) பாவம் 5) ஸாத்வீகபாவம்

14. வர்ணத்தின் சரணம் சரணஸ்வரப் பகுதிகள் இடம்பெறுவது.
1) பூர்வாங்கம் 2) உத்தராங்கம் 3) பல்லவி
4) அனுபல்லவி 5) சரணம்

15. சங்கீத மேளம் தோற்றுவிக்கப்பட்ட காலம்.
1) பல்லவர் 2) சோழர் 3) நாயக்கர்
4) ஆங்கிலேயர் 5) மறுமலர்ச்சி

16. பக்தி ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி.
1) அலாரிப்பு 2) கௌத்துவம் 3) தில்லானா
4) வர்ணம் 5) கீர்த்தனை

17. சீதா ஒரு
1) சாமான்யா நாயகி 2) பிரௌடா நாயகி 3) பிரகல்பா நாயகி
4) ஸ்வீயாநாயகி 5) பரகீயா நாயகி

18. "ஸ்ருங்கார சாவித்திரி" என்ற நூலின் ஆசிரியர்.
1) சேவப்பநாயக்கர் 2) விஜயராகவ நாயக்கர் 3) ரகுநாத நாயக்கர்
4) வீரவெங்கட்ராயன் 5) கிருஷ்ண தேவராயர்

19. ஓம்காரத்தின் வடிவம்.
1) கபாலமாலை 2) தோடும் ருழையும் 3) கோவணம்
4) துடி 5) திருவாசி

20. புஷ்டம் என்பது எவ்வகை அபிநயத்தில் இடம்பெறும்.
1) ஆங்கிகா 2) வாச்சிகா 3) ஆஹார்யா
4) ஸாத்விகா 5) நால்வகை அபிநயத்தில்

21. சோகபாவம் எந்த ரஸத்தை தோற்றுவிக்கின்றது.
1) சாந்தம் 2) ரௌத்ரம் 3) கருணை 4) பயம் 5) பீபட்சம்

22. ஆனந்தத்தாண்டவ முர்த்தம் காணப்படும் திருச்சந்நிதி.
1) சிதம்பரம் 2) பிரகதீஸ்வரர் 3) சோமேஸ்வரம்
4) அருணாசலேஸ்வரர் 5) விருத்தகரீஸ்வரர்

23. குகைக் கோவில்களை அமைத்த அரசன்.
1) சோழன் 2) பல்லவன் 3) பாண்டியன் 4) சேரன் 5) நாயக்கர்

24. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடனம் பற்றி சொற்பொழிவு ஆற்றியவர்.
1) ஈ.கிருஷ்ணையர் 2) சபாஜெயராஜா 3) வி.சிவசாமி
4) பத்மா சுப்பிரமணியம் 5) ருக்மணி தேவி அருண்டேல்

25. லைவரோபாவை அடிப்படையாகக் கொண்ட நடன வகை.
1) ஒடிசி 2) கூச்சுப்புடி 3) கதக் 4) மணிப்புரி 5) மோகினி

26. இந்திரனை காட்ட பிரயோகிக்கும் பாதநிலை
1) ஐந்திரம் 2) ஸ்வஸ்திகம் 3) மோடிதம் 4) ஏகபாதம் 5) சமபாதம்

27. சர்வதேச உலக நடன தினம்
1) வைகாசி 11 2) மாசி 29 3) பங்குனி 29
4) சித்திரை 29 5) புரட்டாதி 29

28. நீரசாந்தன் என்ற நாயகனுக்கு உதாரணமாக திகழ்பவர்.
1) புத்தர் 2) இராவணன் 3) ஸ்ரீகிருஷ்ணன்
4) கோவலன் 5) அர்ச்சுணன்

29. இராமநாதன் நுண்கலைத்துறையில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி அறிமுகப்படுத்தப் பட்ட ஆண்டு.
1) 1996 2) 1997 3) 1999 4) 1998 5) 2000

30. சங்கீத அளவுகோல் எனப்படும் இசைக்கருவி.
1) வயலின் 2) மிருதங்கம் 3) வீணை
4) புல்லாங்குழல் 5) தபேலா

31. அஷ்டபதியை இயற்றியவர்.
1) ஜெயதேவர் 2) முத்துத்தாண்டவர் 3) அருணாசலக்கவிராயர்
4) பாபநாசம்சிவன் 5) மாரிமுத்தாப் பிள்ளை

32. பிசாசுகளுக்கு சாந்திக்கருமம் ஆற்றும் போது பயன்படும் ஆடல்மரபு.
1) முல் மாத்ரய 2) சிந்து மாத்ரய 3) யக்பதமாத்ரய
4) யாதினி மாத்ரய 5) பட்டுதல் மாத்ரய

33. மகா பிராணங்களில் ஒன்று
1) காலம் 2) யதி 3) லயம் 4) ஜாதி 5) களை

34. விபுலானந்தா இசைக்கல்லூரிக்கு முதல்வராக நியமிக்கப்பட்டவர்.
1) பொன்னையாப்பிள்ளை 2) ஆழ்வார்ப்பிள்ளை 3) கணபதிப்பிள்ளை
4) சிவானந்தம்பிள்ளை 5) வடிவேலுப்பிள்ளை

35. மணிப்புரி நடனத்தின் பருவகால உற்சவத்தில் முதலிடம் வகிப்பது.
1) வங்ஜதேசபாலா 2) டொல்சந்ரா 3) அரிபாலா
4) நடபாலா 5) சங்கீர்த்தனம்

36. பொருட்களை கையில் ஏந்தி ஆடும் நடனம்
1) பொம்மலாட்டம் 2) ஏந்தல் நடனம் 3) குதிரையாட்டம்
4) கைக்குட்டை நடனம் 5) குட நடனம்

37. கரிகாற்சோழ மன்னன் முன் ஆடலரங்கேறி தலைக்கோலிப்பட்டம் பெற்றவர்.
1) கண்ணகி 2) ஊர்வசி 3) ரம்பை
4) மாதவி 5) மேனகை

38. வட இலங்கை சங்கீத சபையின் முதலாவது தலைவர்
1) டாக்டர் இயன் சண்டிமன் 2) S.பரம் 3) மு. சிவசிதம்பரம்
4) ஆறுமுகநாவலர் 5) பொன்னையாப்பிள்ளை

39. சங்கீத சுகாதாரம் எனும் நூலின் ஆசிரியர்
1) ஹரிபாலர் 2) சக்திபாலா 3) ஹிரி
4) சோமநாதர் 5) நாரதர்

40. அபிநயத்தின் கண்ணாடி என கூறப்படுவது.
1) அபிநயசாரசம்புடம் 2) அபிநயதர்ப்பணம் 3) பஞ்சமரபு
4) அபிநயநவநீதம் 5) நாட்டிய ஸாஸ்திரம்

41. நாட்டிய ஸாஸ்திரத்தில் இரண்டாவது அத்தியாயமாகக் குறிப்பிடப்படுவது.
1) அரங்கம் 2) ரஸம் 3) அபிநயம் 4) விருத்தி 5) கரணங்கள்

42. திரிபங்க நிலையைக் கொண்ட நடனம்
1) பரதம் 2) கூச்சுப்புடி 3) ஒடிசி 4) கதக் 5) மணிப்புரி

43. "படுக்கை நொத்ததடி பாலும் கசந்ததடி" இப்பாடலடி உணர்த்தும் நாயகி.
1) கலகாந்தரிதா 2) வாசகசஜ்ஜிதா 3) விரகோத்கண்டிதா
4) கண்டிதா 5) ஸ்வாதீனபதிகா

44. பதினொரு வகை ஆடல்களில் திருமகள் ஆடியது.

1) மல்லாடல் 2) அல்லியம் 3) குடமாடல்
4) குடை 5) பாவை

45. "அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து" என கூறியவர்.

1) சம்பந்தர் 2) நாவுக்கரசர் 3) மணிவாசகர்
4) சுந்தரர் 5) ஆழ்வார்

46. இப்படத்தில் காணப்படும் கூத்து ஆகும்.



1) பறைமேளக்கூத்து
2) மகிடிக்கூத்து
3) வசந்தன் கூத்து
4) வடமோடிக்கூத்து
5) தென்மோடிக்கூத்து

47. இப்படம் பிரதிபலிக்கும் ஸாஸ்திரீய நடனம்.



1) ஒடிசி
2) கதகளி
3) மணிப்புரி
4) கதக்
5) கூச்சுப்புடி

48. இப்படம் ………. நடனத்தைக் குறிக்கின்றது.



1) சுளகு நடனம்
2) பானை நடனம்
3) பொம்மலாட்டம்
4) ஒயிலாட்டம்.
5) குதிரையாட்டம்

49. இப்படத்தில் காட்டப்பட்டுள்ளவர் ……… என்ற நிறுவனத்தை நிறுவியவர் ஆவார்.



1) இராமநாதன் நுண்கலைக் கழகம்
2) ரசிகரஞ்சனசபா
3) சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்
4) திருமறைகலாமன்றம்
5) வட இலங்கை சங்கீதசபை

50. இப்படம் குறிக்கும் இலங்கையின் சாஸ்திரிய நடனம்



1) கண்டியன் நடனம்
2) றுகுணு நடனம்
3) சப்ரகமுவ நடனம்
4) கைக்குட்டை நடனம்
5) மீனவ நடனம்

(50X2=100 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | பரதநாட்டியம் - II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

❖ **பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

*01.* i) வர்ணத்தின் வகைகளைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii) நாட்டியத்திற்காக அமைக்கப்பட்ட வர்ணம் எது? *(1 புள்ளி)*

iii) நீர் கற்ற வர்ணத்தின் இராகம் தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

iv) அனுபல்லவியில் வரும் 2 வது தீர்மானத்தையும் 1 வது சரணஸ்வரக் கோர்வைகளையும் தாள அங்கக் குறியீட்டில் எழுதுக.

*(15 புள்ளிகள்)*

*02.* i) ஸப்த தாளங்கள் 35 தாளங்கள் ஆகும் முறையினை அட்டவணைப்படுத்துக

*(5 புள்ளிகள்)*

ii) பின்வரும் எண்ணிக்கை உடைய தாளங்களின் ஜாதி, கதி பேதங்களையும் தாளத்தின் பெயர்களையும் குறிப்பிடுக.

i) 203 ii) 80 iii) 108 iv) 162 v) 154

vi) 63 vii) 49 viii) 27 ix) 54 x) 32 *(10 புள்ளிகள்)*

iii) ஸ்ரோதேவக யதியை முடிவாகக் கொண்டு 3 ஆவர்த்தனங்களுக்கு கோர்வை ஒன்றினை அமைக்குக. *(5 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*03.* ''தமிழ் மக்களின் பாரம்பரிய ஆடல் வடிவம் கூத்து''

i) ஈழத்தில் காணப்படும் கூத்துக்களில் பிரதானமானவற்றைப் பிரதேசவாரியாகத் தருக.

*(3 புள்ளிகள்)*

ii) பின்வரும் கூத்து வகைகளை விளக்குக.

அ) மகிடிக்கூத்து ஆ) வாசாப்புக்கூத்து இ) மலையகக்கூத்து *(9 புள்ளிகள்)*

iii) அருகிவரும் கூத்துக்களைப்பேணி பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உமது பார்வையில் விளக்குக.

*(8 புள்ளிகள்)*

## பகுதி – II

04. பரதக்கலை மறுமலர்ச்சிக்கு வித்திட்டவரின் வாழ்க்கைப் பின்னணியையும் கலைத்தொண்டினையும் தருக.

(20 புள்ளிகள்)

05. i) நாட்டிய நாடகத்தின் லக்ஷணத்தை தருக. (8 புள்ளிகள்)

ii) நாட்டிய நாடகத்தை நெறியாள்கை செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை விபரிக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. சிறுகுறிப்பு எழுதுக.

i) ஏந்தல் நடனம்

ii) பாகவதமேளம்

iii) அஷ்டபதி

iv) சாக்கையர்

(4x5=20புள்ளிகள்)

07. i) பேசும் கருவி என கூறப்படும் வாத்தியம் எது. (2 புள்ளிகள்)

ii) அவ்வாத்தியத்தின் அமைப்பு பற்றி விபரிக்க. (5 புள்ளிகள்)

iii) வாசிக்கும் முறை பற்றி விபரிக்க. (5 புள்ளிகள்)

iv) அமைப்பினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

08. கலை வளர்க்கும் அரச நிறுவனம், அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினை விபரிக்க.

(மொத்தம் 20 புள்ளிகள்)